<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 1075/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.1 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜ்குமார் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ராஜகோபால் | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 07.08.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் சாளையூரில் வசித்து வருகிறேன். டிரைவர் வேலை செய்து வருகிறேன். பிரிமியர் காட்டன் மில்லில் டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 04.08.2022 ம் தேதியன்று எங்கள் மில்லின் SGM அவர்களின் துணைவியாரை கோவிலுக்குஅழைத்து செல்ல TN 66 L 3944 என்ற Wolks wagon vento காரில் அழைத்து சென்றேன். வாகனத்தை நான் ஓட் சென்றேன். SGM அவர்களின் துணைவியார் காரின் பின்பக்கம் அமர்ந்து வந்தார். காலை 10.30 மணிக்கு வீட்டிலிருந்து புறப்பட்டோம். 11.45 மணியளவில் தளி ரோடு மேம்பாலம் அரசு மகளிர் பள்ளி அருகில் பாலத்தின் மேல் சென்ற போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி ஸ்கூட்டி வ்நது கொண்டிருந்தது. அந்த வாகனத்தின் முன் ஒரு கார் வந்தது. ஸ்கூட்டி வாகனம் வேகமாக வந்து அவருக்கு முன்பாக சென்ற காரின் மீது மோதி அதன் பின் எங்கள் காரின் மீது மோதி கீழே விழுந்துவிட்டார். நாங்கள் சென்று போய் பார்த்த போது ஸகூட்டி வாகனத்தை ஓட்டி வந்தவர் மது போதையில் இருந்தார். உடனடியாக அவரை உடுமலை அரசு மருததுவமனைக்கு அனுப்பி வைத்தோம். அவர்விபபத்து ஏற்படுத்தியதில் எங்கள் காரின் முன்பக்க டயர் அருகில் சைடில் மேல்பகுதியில்

ஒடுங்கிவிட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் நான் எழுதியது தான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அசா.ஆ.1 என குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவக்குறிப்பில் மது போதையில் இருந்தார் என்று இருநதது. நான் பார்த்தேன். பின் ஸ்கூட்டி ஓட்டி வாகனத்தை ஓட்டிவந்தவர் உடுமலை சேர்ந்த சலிம் என்று தெரிந்து கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நீங்கள் தான் தென்வடல் ரோட்டில் மைய பகுதியில் அஜாக்கிரதையாக வந்து மாருதி காரின் மீது நீங்கள் மோதிவிட்டிர்கள் என்றாலும் பின் வந்த மாருதி கார் திடீரென பிரேக் போட்டதால் தான் அதன் பின்னால் வந்த எதிரி கீழே விழுந்து அடிப்பட்டது என்றால் சரியல்ல. எதிரி மது அருந்தி இருந்ததற்காக ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை ஆனால் அவர் மது போதையில் இருந்ததற்கான ஆவணம் நான் வைத்துள்ளேன். விபத்தில் உங்களுக்கு அடிப்படவில்லை என்றால் சரிதான். நீங்கள் அஜாக்கிரதையாக வந்ததால் எதிரிக்கு தான் அடிப்பட்டது என்றால் சரியல்ல. நீங்கள் அழைத்து சென்றவர் பெயர் என்ன என்றால் சுகந்தி. மேற்படி சுகந்தி என்பவரது influence பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளிர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

   மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.

<u>DEPOSITION OF WITNESS</u>
<u>Judicial Form No. 53</u>
<u>(See Rule 42)</u>
(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 1075/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.2 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சுகந்தி | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | பூபதி | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 07.08.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் உடுமலைப்பேட்டை சிவலிங்கம் லேஅவுட்டில் வசித்து வருகிறேன். இதற்கு முன் பிரிமியர் காட்டன் மில் குவாட்டர்ஸ்ஸில் குடியிருந்து வந்தோம். எனது கணவர் SGM ஆக அதே மில்லில் வேலை செய்து வந்தார். 04. 08.2022 நான் சாய்பாபா கோவிலுக்கு சாமி கும்பிடுவதற்காக வீட்டிலிருந்து Wolks wagon vento TN 66 L 3944 என்ற காரில் புறப்பட்டு வந்தேன். எனது டிரைவர் அசா.1 ராஜ்குமார் ஓட்டி வந்தார். தளி ரோடு மேம்பாலம் அருகில் வடக்கிலிருந்து தெற்குநோக்கி நாங்கள் சென்று கொண்டிருந்த போது எதிரில் ஒரு ஸகூட்டி வாகனம் வந்து கொண்டிருந்தது. அந்த வாகனத்தின் முன்னால் சிப்ட் கார் வந்து கொண்டிருந்தது. எதிரில் வந்த ஸ்கூட்டி வாகனம் வேகமாக வந்ததை நான் பார்த்தேன். உடனே நான் டிரைவரிடன் வாகனம் வேகமாக வருவதாக சொன்னவுடன் டிரைவர்இடதுபுறமாக எடுதது மெதுவாக சென்று கொண்டிருந்தார். ஏறக்குறையவானத்தை நிறுத்தும் அளவிற்கு டிரைவர் ஓட்டி வந்த போது ஸகூட்டி வாகனம் வேகமாக வந்து முன்னால் சென்ற மாருதி காரின் மீது இடித்து எங்கள் வாகனத்தின் முன் புறமாக மோதி

கீழேவிழுந்து விட்டார். பின்னர் உடனே கூட்டம் சேர்ந்து விட்டது. கீழே விழுந்தவரை பார்த்த போது அனைவரும் அவர் குடிபோதை யில் இருந்ததால் அவரை தொடுவதற்கு பயப்பட்டார்கள். உடனடியாக உடுமலை அரசு மருத்துவமனைக்கு தகவல் கொடுதது ஆமபுலன்ஸ் மூலம் மருத்துவமைனைக்கு அழைத்து சென்றார்கள். எனது டிரைவர் அசா.1 காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். போலிசார் என்னை சம்பவ இடத்தில் வந்து விசாரித்தார்கள். அதன் பிறகு நான் வீட்டிற்கு சென்று விட்டேன்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. அசா.1 ராஜ்குமார் உங்களிடம் டிரைவராக எத்தனை வருடங்கள் உள்ளார் என்றால் சுமார் பத்து வருடம் இருக்கும். நீங்கள் காரின் பின் சீட்டில் அமர்ந்து சென்ற நிலையில் எதிரில் வந்த கார் மட்டும் தான் உங்களுக்கு தெரியும் என்றாலும் அதற்கு பின்னால் வரும் ஸ்கூட்டியின் வாகனம் உங்களுக்கு தெரியாது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறார்கள் என்றால் இல்லை பின்னால அமர்ந்திருந்தாலும் வலது புறம் கேப் இருந்தது அதன் மூலம் தெரிந்து கொண்டேன். லாங் தொலைவில வந்ததால் தெரிந்தது.
2. அசா.1 ராஜ்குமார் தென்வடல் ரோட்டில் அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி சென்றார் என்றாலும் எதிரில் வந்த மாருதி கார் மீது மோதி விட்டார் என்றாலும் மாருதி கார் திடீரென பிரேக் போட்டதால் அதன் மீது ஸ்கூட்டியில் வந்தவர் இடித்து கீழே விழுந்து விட்டார் என்றால் இல்லை. அசா.1 ராஜ்குமார் அஜாக்கிரதையால் தான் விபத்து ஏற்பட்டது என்றாலும் உங்களது Influence ஐ பயன்படுத்தி எதிரிமீது பொய்யாக வழக்குபோட்டுள்ளிர்கள் என்றாலும் சரியல்ல. காருக்கு நஷ்டஈடு பெற வேண்டி போட்டப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை</u>

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala, B.Com.,B.L.,

நீதித்துறை நடுவர் எண்.1

உடுமலைப்பேட்டை.